Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

14.12.2020 திங்கட்கிழமை தொடர்புக்கு 076

# யாழ்ப்பாணம் முடக்கப்படாது

## மாவட்டச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ்ப்பாண மாவட்டத்தை முடக்குவது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. தொற்று அடையாளம் காணப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் சுயதனி மைப்படுத்தலுக்கு உட்படுத் 02

# வடக்குக்கு 16ஆம் திகதி பருவப்பெயர்ச்சி மழை

## 22ஆம் திகதி மற்றொரு தாழமுக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 14
வடகீழ் பருவப்பெயர்ச்சி காற்றால் நாளைமறுதினம் 16ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை வடக்கு மாகாணத்துக்கு மழை கிடைக்கப்பெறும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் ந.பிரதீபராஜா தெரிவித்தார்.
அத்துடன் 22ஆம் திகதி வங்காள விரிகுடாவில் மற்றொரு தாழமுக்கம் உருவாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஒ,5)

# தொற்றாளர் நடமாடியதால் உரும்பிராய் சந்தைக்கு பூட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 14
உரும்பிராய் பொதுச் சந்தை முன்னெச்சரிக்கை நோக்கில் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் கோரிக்கைக்கு அமைய 02

# சங்கானை சந்தையும் பூட்டு பி.சி.ஆருக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 14
சங்கானை மரக்கறிச் சந்தை இன்று மூடப்பட்டு சந்தை வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்ளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை வந்ததும் வழமைபோன்று சந்தையைத் திறப்பதற்கு நடவடிக்கை 02

# யாழ்ப்பாணம், வலிகாமம் வலய பாடசாலைகள் அனைத்தும் மூடல்

## கல்வி அமைச்சின் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14
வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயங்களுக்கு உள்பட்ட அனைத்து பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் எல். இளங்கோவன் அறிவித்துள்ளார். 02

# வவுனியா நீதிமன்ற செயற்பாடு மட்டுப்படுத்தல்

வவுனியா, டிசெ. 14
வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட திருகோணமலையைச் சேர்ந்தவருக்கு கொவிட் 19 தொற்று இன்று இனங்காணப்பட்டுள்ள நிலையில் வவுனியா நீதிவான் நீதிமன்றின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டது. 02

# மருதனார்மடம் கொத்தணி பளையில் இறுதிச் சடங்குக்கு சென்றுள்ள தொற்றாளர்

கிளிநொச்சி, டிசெ. 14
மருதனார்மடச் சந்தை கொத்தணியில் கொரோனா தொற்று உறுதியான நபர் ஒருவர் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமத்தில் இறுதிச் சடங்கில் பங்கேற்றுள்ளார். அதில் கலந்து கொண்டவர்களை அடையா 02

# நீதிமன்ற நடவடிக்கை: ஒதுங்கும் சட்டத்தரணிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 14
மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இன்று திங்கட்கிழமை முதல் நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருக்கத் தீர்மானித்துள்ளோம் எனச் சட்டத்தரணிகள் அறிவித்துள்ளனர். 02

# ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு தயார்

கொழும்பு, டிசெ. 14
தலைவர் உட்பட கட்சி நிர்வாகிகளை வருடா வருடம் தெரிவுசெய்யும் விதத்திலான ஜனநாயக வியூகத்தின் அடிப்படையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவல 02

# கொரோனாவின் பிடிக்குள் வவுனியா சிறைச்சாலையும்

வவுனியா, டிசெ. 14
வவுனியா சிறைச்சாலை கைதி ஒருவருக்குக் கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. 02

# சாளம்பைக்குள உபகொத்தணி: மேலும் மூவருக்கு தொற்று!!!

வவுனியா, டிசெ. 14
கொரோனாத் தொற்றாளர்கள் இருவர் அடையாளம் காணப்பட்ட புதிய சாளம்பைக்கு 02



# தமிழ் மீனவர்களுக்கு உதவும் பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு

## மாவை.சேனாதிராசா சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 14
இலங்கைத் தமிழ் மீனவர்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பும், அவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புகின்ற 02

# எதிர்ப்பு அரசியலால் தமிழருக்கு நன்மையில்லை

## பட்ஜெட் வாக்கெடுப்பில் பங்கேற்காமைக்கு விக்னேஸ்வரன் இப்படி விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 14
எதிர்ப்பு அரசியலால் நாம் கண்ட நன்மை ஒன்றுமில்லை. அத்துடன் இணக்க அரசியல் என்று கூறி சுயநலமிகள் இணக்க அரசியல் செய்து வந்ததால் எம் மக்கள் கண்ட நன்மை ஒன்றுமில்லை. இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
வரவு - செலவு திட்ட வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமை 09

# ரி.என்.ரி. வெடிபொருளை கிரைண்டரில் அரைத்தநபர்

## எட்டு பேர் காயம்

யாழ்ப்பாணம், டிசெ. 14
டைனமற் தயாரிப்பதற்காக ரி.என்.ரி. வெடிபொருளை கிரைண்டரில் அரைத்தநபர் உள்ளிட்ட 8 பேர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப் 02

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# யாழ்ப்பாணம், வலிகாமம்....

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய கல்வி அதிகாரிகளுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலின் பின் மாகாண ஆளுநரின் அனுமதியுடன் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
மருதனார்மடம் கொரோனாத் தொற்றுப் பரவல் கொத்தணியின் பின்னர் வலிகாமம் கல்வி வலயத்துக்கு உள்பட்ட உடுவில் மற்றும் தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை மூடப்பட்டன.
இந்த நிலையில் வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயங்களுக்கு உள்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன என்று மாகாண கல்வி அமைச்சின் செயலர் எல். இளங்கோவன் அறிவித்துள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட 104 பாடசாலைகளும் வலிகாமம் கல்வி வலயத்துக்கு உள்பட்ட 147 பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன, என்றார். (ஒ,5)

# யாழ்ப்பாணம்....

தப்படுவார்கள். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற் கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஒக்ரோபர் மாதத் திலிருந்து 59 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இவர்க ளில் 18பேர் சிகிச்சைகளை முடித்து வெளியேறியுள் ளனர்.
இதுவரை 744 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப் பட்டிருந்த நிலையில் தற்போது, மருதனார்மடம் தொற்றாளருடன் தொடர்புடைய 400 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.
மாவட்டத்தில் பரவலாக தொற்றுக் கண்டறியப்பட்டுள் ளது. ஒரு பிரதேச செயலர் பிரிவை மாத்திரம் முடக்குவ தால் பிரயோசனம் இல்லை. இதன் காரணமாகவே உடுவில் பிரதேச செயலர் பிரிவு முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவ தையும் முடக்க முடியாது. கொழும்பு மாவட்டத்தில் தொற்றாளர்கள் கண்டறியப்படும்போது அந்தப் பகுதி மாத்திரம்தான் முடக்கப்படுகின்றது. அதேபோன்று மாவட்டம் முழுவதும் முடக்கப்படாது.
மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் தளர்த்தப்பட்ட சுகாதார நடைமுறைகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும், என்றார். (ஒ,5)

# தமிழ் மீனவர்களுக்கு...

பொறுப்பும் இந்திய அரசுக்கு உள்ளதென, இந்தியாவின் பொறுப்புவாய்ந்த அதிகாரியிடம் இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா வலியுறுத்தியுள்ளார்.
முல்லைத்தீவு மீனவர்கள் இந்திய இழுவைப்பட குகளால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர் பில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமையிலான குழுவினர் மாவை சோனாதிராசாவை இன்று சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.
கலந்துரையாடல் இடம்பெற்றுக் கொண்டிருக் கும்போது வடமாகாணசபை முன்னாள் உறுப் பினர் து.ரவிகரனுக்கு இந்தியாவிலிருந்து பொறுப்புவாய்ந்த அதிகாரி தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியிருந்தார். இலங்கை மீனவர்களின் கோரிக்கை நியாயமானது என வும் அதனைத் தாம் ஏற்றுக்கொள்கின்றேன் எனவும் தெரிவித்தார். இந்திய மீனவர்களின் அத்துமீறலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.
அதனைத் தொடர்ந்து தமிழ் அரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவும் கலந்துரை யாடினார். இதன்போதே இலங்கைத் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப் பும் பொறுப்பு இந்தியாவுக்கு உண்டென்று சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ,246)

# தொற்றாளர்...

தற் காலிகமாக உடன் நடை முறைக்கு வரும்வகையில் மூடப்படுகிறது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.
கொரோனா தொற்றுக்குள்ளானவரி டம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவர் உரும்பிராய் பொதுச் சந்தையில் அதிகமாக நடமாடியதாகத் தெரிவிக்கப்பட் டதைத் தொடர்ந்தே இந்த நடவ டிக்கை எடுக்கப்பட்டது. எதிர்வரும் நாள்களில் சுகாதார ஆலோசனை பெறப்பட்டு மீளத் திறப்பது தொடர் பில் முடிவு எடுக்கப்படும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார். (ஒ,5)

# சங்கானை...

மேற்கொள்ளவுள்ளது என வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் நடனேந்தி ரன் தெரிவித்தார். (ஒ,20)

# வவுனியா நீதிமன்ற...

வவுனியா நீதிவான் நீதிமன்றத்தின் அநேகமான வழக்குகள் தவணையிடப்பட்டன. சிலர் சொந்தப் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். இதேவேளை நீதிமன்றத்தில் தொற்று நீக்கம் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட் டன. (ஒ,110)

# பளையில் இறுதி....


ளம் கண்டு தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.
கடந்தவாரம் விபத்தில் சிக்கி உயிரிழந்த ஒருவ ரின் இறுதிச் சடங்கு நேற்றுமுன்தினம் நடைபெற் றது. அன்றைய தினம் மருதனார்மடம் சந்தையில் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த கைதடியைச் சேர்ந்த ஒருவர் கலந்து கொண்டுள் ளார். அவருக்கான பி.சி.ஆர். முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் தொற்று இருப்பது உறுதிப் படுத்தப்பட்டது.
இதனையடுத்து அவர் பங்கேற்ற இறுதிச் சடங் கில் கலந்து கொண்டவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (ஒ,6)

# ரி.என்.ரி. வெடிபொருளை...

பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
குருநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கல்லுத் தன்மையாகக் காணப்பட்ட ரி.என்.ரி. வெடிமருந்தை கிரைண்டரில் போட்டு தூளாக்க ஒருவர் முயன்றுள்ளார். அது வெடித்துள்ளது. இதனால் 8பேர் வரையில் காயமடைந்தனர்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் எரிபொருள் சிலிண்டர் வெடித்து காயம் ஏற்பட்டதாகத் தெரிவித்து சேர்க்கப் பட்டிருந்ததாலும் பொலிஸாரின் விசாரணை களில் ரி.என்.ரி. வெடிபொருளை, டைன மற் தயாரிக்க தூளாக்கியமை தெரியவந் துள்ளது. (ஒ,5)

# நீதிமன்ற நடவடிக்கை:...

இந்த அறிவிப்பை மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், சட்டத்தரணி சோ.தேவராஜா மற்றும் செயலர், சட்டத்தரணி க.சுகாஷ்; இருவரும் இணைந்து வெளியிட்டுள்ளனர்.
நீதிமன்ற நடவடிக்கைகள் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் பருவகால விடுமுறைக்காக இடைநிறுத்தப்படவுள்ள நிலையில் 4 நாள்கள் முன்னதாக சட்டத்தரணிகள் சங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர். (ஒ,5)



# கொரோனாவின்...

திருகோணமலையைச் சேர்ந்த கைதிக்கு கடந்த 12ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந் தது. பரிசோதனை முடிவு நேற்று கிடைக்கப் பெற்றது. தொற்று அவருக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய கைதிகளுக்கு தொற்று பரவாமல் இருக்க முன்னாயத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஒ,110)

# சாளம்பைக்குள ...

ளம் பகுதியில் மேலும் மூவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட் டுள்ளது. கடந்த மாதம் கொழும்பிலிருந்து வவுனியா திரும்பிய தாயும், மகளும் சாளம்பைக் குளத்தில் அமைந்துள்ள அவர்க ளது வீட்டில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களுக் கான பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்கும் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து வவுனியா புதிய சாளம்பைக்குளம் பகுதி நேற்றுமுன்தினம் காலை முதல் தற்காலிகமாக முடக்கப்பட்டது. தொற்று உறுதியான இருவரி டத்திலும் நெருங்கி பழகியவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனை கள் முன்னெடுக்கப்பட்டன. அவர்களில் 3 பேருக்கு மேலும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
இந்நிலையில் புதிய சாளம்பைக்குளம் பகுதியின் முடக்கம் நீடிக்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பகுதியில் அமைந்துள்ள அல்அக்சா பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 16ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ஒ,110)

# ஐக்கிய மக்கள்...

கத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய யாப்பில் தலைவர் உட்பட நிர்வாக உறுப்பினர் களின் பதவிக் காலம் ஒரு வருடமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வருடா, வருடம் நிறைவேற்றுக்குழு ஊடாக தலைவர் பதவி உட்பட நிர்வாக பதவிக ளுக்கு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டு, வருடாந்த சம்மேளனத்தில் அதற்கு அனுமதி பெறவேண்டும். இவ்வாறு ஜனநாயக வியூகத்தின் அடிப்படை யிலேயே யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நம்பிக்கையும் கட்டியெ ழுப்பப்பட்டுள்ளது.
செயற்குழு இருந்தாலும் நிறைவேற்றுக்குழுவே பலம்பொருந்திய கட்டமைப் பாக கட்சியில் விளங்கும், என்றார். (ஒ,44)

# பொலிஸாரின் அசமந்தம் காரணமாக கோவில் நிர்வாகத்துக்கு பிடியாணை

வவுனியா, டிசெ. 14

வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் கோவில் நிர்வாகத்தின ருக்கு எதிரான வழக்கு தொடர்பில், பொலிஸார் உரியமுறையில் அறிவிக் காமையால் கோவில் நிர்வாகத்தினருக்கு வவுனியா நீதிமன்றம் பிடியாணை பிறப்பித் துள்ளது.



நெடுங்கேணி வெடுக்கு நாறி மலையில் வழிபாடு களை மேற்கொள்வதற்கு தொல்பொருள் திணைக்க ளத்தின ரும் நெடுங்கேணி பொலிஸாரும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வந்தனர்.

தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அது வவுனியா நீதிமன்றில் கடந்த ஒக்ரோபரில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கோவில் சார்பில் தலைவர் சசிகு மார், செயலாளர் தமிழ்ச்செல்வன், பூசகர் மதிமுகராசா ஆகியோர் முற்பட்டிருந்தனர்.

நீதிமன்றில் முற்பட்டிருந்த பொலி ஸார் கோவில் நிர்வாகத்தினரைக் கைதுசெய்யவேண்டும் என்றும் தொல்பொருள்கள் சார்ந்த விடயம் என்பதால் வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை நிர்வாகத்தினரை விளக்கமறியலில் வைக்கவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தனர்.

எனினும், அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் கோவில் நிர்வாகத்தினர் விடுவிக்கப்பட்டி ருந்தனர். கடந்த நவம்பர் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந் தது. நவம்பர் 6 ஆம் திகதி கோவில் நிர்வாகத்தினர் நீதிமன்றில் முற்பட்டனர். எனினும், கொவிட்19 அச்சுறுத்தல் காரணமாக அநேகமான வழக்குகள் எதிர்வரும் தை மாதத்துக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

இந்தநிலையில், தொல் பொருள் திணைக்களம் சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்து அவர்கள் ஊடாக கோவில் நிர்வாகத்தினருக்கு எதிரான வழக்கை முன்னரே அழைக்குமாறு நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்தி ருந்தனர். அதன்படி டிசெம்பர் 11 ஆம் திகதிக்கு வழக்கு தவணையி டப்பட்டிருந்தது. எனினும், டிசெம் பர் 11ஆம் திகதி கோவில் நிர்வாகத்தி னர் நீதிமன்றில் சமூகம ளித்திருக்கவில்லை என்று தகவல் தெரிவிக்கப்பட்டது.

"வழக்கு திகதி மாற்றம் செய்யப் பட்டது தொடர்பாக நெடுங் கேணி பொலிஸார் தமக்குத் தெரி யப்படுத்தவில்லை. வேறு வகை யிலும் தெரியப்படுத்தவில்லை. நாங்கள் அறிந்திருக்கவுமில்லையே" என்று கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (த-110)

## கண்டியில் மீண்டும் இயங்கும் 42 பாடசாலைகள்!!

கண்டி, டிசெ.14

கண்டியில் கொரோனா அச்சு றுத்தல் காரணமாக 45 பாடசா லைகள் கடந்த 26 ஆம் திகதி மூடப்பட்ட நிலையில், இன்று முதல் 42 பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது.

45 பாடசாலைகளில் டிரினிட்டி கல்லூரி, தக் ஷிலா கல்லூரி மற்றும் கலைமகள் கல்லூரி என்பன மறு அறிவித்தல் வரை மூடப்பட்ட நிலையிலேயே இருக்கும். ஏனைய 42 பாடசா லைகளும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே மற்றும் சுகாதார அதிகாரிக ளின் அறிவுத்தல்களுக்கு அமைவாக இன்று மீண்டும் திறக்கப்பட்டன. (ற-இ)

## நிர்வாக சேவையில் 380 வெற்றிடங்கள்

கொழும்பு, டிசெ.14

அரச நிர்வாக சேவையில் 380 பதவி வெற்றிடங்கள் காணப் படுகின்றன என அரச நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றில் பிரதேச செயலாளர் களுக்கான வெற்றிடங்களும் காணப்படுகின்றன என, அரச நிர்வாக அமைச்சின் செயலா ளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித் துள்ளார்.

இதற்கமைய ஜனவரி மாதத் தில் 200 புதிய அதிகாரிகள் இணைத்துக்கொள்ளப்படவுள் ளனர் எனவும், இதற்கான பரீட்சை நடவடிக்கைகள் தற்போது நிறைவ டைந்துள்ள எனவும் அவர் தெரிவித்துள் ளார். (ந-இ)

## ரூ. 360 மில்லியன் செலவில் புதிய பி.சி.ஆர். இயந்திரங்கள்

கொழும்பு, டிசெ.14

இலங்கைக்கு எதிர்வரும் 2 மாதங்களுக்குள் பி.சி.ஆர் பரிசோத னைகளை துரிதப்படுத்தும் 10 புதிய இயந்திரங்கள் கொண்டு வரப்படவுள்ளன என்று ஆரம்ப சுகாதார சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர், மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவித் துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் திட்ட சேவைகள் தொடர்பான அலுவ லகத்திடம் இதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இந்தப் புதிய இயந்திரங்கள் மூலம் மூன்றரை மணித்தியாலங்களில் பி.சி.ஆர் பரிசோதனை முடிவு களை பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக 360 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் 2 லட்சத்து 50 ஆயிரம் பி.சி.ஆர் இயந்திரங்களை பெற்றுக் கொள்வ தற்காக 800 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)

## நெற் செய்கைக்கு சேதம் செய்த யானை உயிரிழப்பு!

முல்லைத்தீவு, டிசெ.14

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் விவசாயிகளால் எரிஞ்ச காட்டுப் பகுதி யில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய் கையை அழித்து வந்த யானை உயிரிழந் துள்ளது.

இந்த யானை கடந்த பத்து நாள்களுக்கு மேலாக பின்னங்கால் பாதிக்கப்பட்ட நிலையில், விவசாய நிலத்துக்குள் நின்று நெற்பயிர்களை அழித்து வந்துள்ளது.

ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெற்செய் கையில் நூறு ஏக்கர் நெற்செய்கையை இந்த யானை அழித்துள்ளது.

இந்த நிலையில் இந்த யானை குறித்து விவசாயிகள் விவசாய போதனாசிரியர் மற்றும் வனஜீவராசிகள் திணைக்க ளத் துக்கு தெரியப்படுத்தி யானைக்கு சிகிச்சையளித்துள்ளார்கள்.

பின்னர் யானை வயல் நிலத்துக்கு அருகில் உள்ள பற்றைக்காட்டில் நின்ற வேளை நேற்று இரவு உயிரிழந்துள்ளது.

யானையின் உயிரிழப்பு தொடர்பில் இன்று வனஜீவராசிகள் திணைக்களத்தி னர் பிரேத பரிசோதனையை மேற்கொண்டுள்ளனர். (ற-19)





# அரசுடன் பேச தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமை அவசியம்

### சுரேன் ராகவன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.14

அரசுடன் பேசுவதற்கு தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமை மிகவும் அவசியமானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கலா நிதி சுரேன் ராகவன் தெரிவித் துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி யொன்றின் நேரடி அரசியல் விவாத நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது,

பெரும்பான்மை பௌத்தர் களின் அமோக ஆதரவைப் பெற்று, ஆழமான சிங்கள தேசியத்துவத்துடன் தற்போது ஆட்சியமைத்துள்ள அரசுடன் பேசுவதற்கு தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமையும் முக்கிய மானதாகக் காணப்படுகின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான் மையுடன் ஆட்சியிலுள்ள, தேசியவாத தென்னிலங்கை அரசுடன், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர் பில் பேச்சுவார்த்தையை முன்னெ டுப்பதற்கு, புதியதொரு அணுகுமுறையையும் அரசியல் மொழியையும் உருவாக்க வேண்டிய பொறுப்பு தமிழ் புத்திஜீவிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் இருக்கின்றன என்றார். (ற-இ)





## மன்னார் மாவட்டத்தில்

# கத்தரி, பயிற்றை செடிகளில் புதிய வகை நோய்த் தொற்று

*மன்னார், டிசெ.15*

புரேவி புயல் மற்றும் மழையின் பின்னர் தற்போது கத்திரி மற்றும் பயிற்றை செடிகளில் புது வகை நோய் தொற்றி வருகின்றன எனத் தோட்டச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்ற னர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

புரேவி புயல் மற்றும் மழையின் பின்னர் ஏற்பட்டுள்ள இந்த நோய்த் தாக்கத்தால் கத்திரி மற்றும் பயிற்றை செடிகள் வாடிக்காணப்படுவதுடன், இலைகள் மஞ்சள் நிறமாக பழுத்து விழுகிறது. இதனால் செடிகளில் காய்கள் மிகவும் குறைவாகவே காய்க்கின்றன.

நீண்டகாலமாக பயிற்றை மற்றும் கத்திரிகளை பயிர் செய்து வருகிறோம். தற்போதைய மழையின் பின்னரே இவ்வாறான நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த வருடத்தின் தோட்டப் பயிர்ச் செய்கையும் மிகப் பெரும் நஷ்டமாகவே உள்ளது. என்றனர்.

இந்த நோய்த் தாக்கம் மன்னார் இராசமடு மடுக்கரைப் பகுதியில் உள்ள தோட்டங்களில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-213)

## மாட்டிறைச்சி மாட்டியது!!!

*யாழ்ப்பாணம், டிசெ. 14*

கிளிநொச்சியிலிருந்து சங்குப்பிட்டி பாதையூடாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்ட 230 கிலோ மாட்டு இறைச்சியை பாதுகாப்புத் தரப்பினர் கைப்பற்றியுள்ளனர். வாகனம் ஒன்றை சந்தேகத்தில் மறித்து சோதனையிட்டபோதே இந்த இறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸாரிடம் வாகனச் சாரதி ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஓ.20)

## 100 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்

*கொழும்பு, டிசெ.14*

கொரோனாத் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 100 இலங்கையர்கள் இன்று நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும், 3 விசேட விமானங்கள் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதன்படி சிங்கப்பூரிலிருந்து 8 பேரும், சவூதி அரேபியாவிலிருந்து 50 பேரும், கட்டார் டோகா நகரிலிருந்து 42 பேரும் வருகை தந்தனர்.

நாடு திரும்பிய வர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள கொழும்பு தனியார் வைத்தியசாலை பணியாளர்களால் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்று விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-இ)

## இராஜாங்க அமைச்சுக்களுக்கு செயலாளர்கள் நியமனம்

*கொழும்பு, டிசெ.14*

39 இராஜாங்க அமைச்சுக்களுக்கான செயலாளர்களை நியமிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவின் கையெழுத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நியமனங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் செல்லுபடியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தேசிய பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஒய்வு பெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். ஆரம்ப சுகாதார சேவை, தொற்றுநோயியல் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக டி.பி.ஜி குமாரசிறியும் சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஜி.சி.கருணாரத்னவும், மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் செயலாளராக கே.ஆர்.உடுவாவலவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ந-இ)

## நாடிக்கு மாஸ்க் அணிந்தவர் கைது

*சாவகச்சேரி, டிசெ. 14*

யாழ்ப்பாணத்தில் மருதனார்மடம் கொரோனா உப கொத்தணி உருவாகியுள்ள நிலையில் சாவகச்சேரி பொதுச் சந்தைக்குள் நாடிக்கு முக கவசம் அணிந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று காலை சாவகச்சேரி சந்தையில் இடம்பெற்றது.

பொதுச் சந்தைகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கண்காணிப்புக்களில் ஈடுபட்டுள்ளனர். கொவிட் தடுப்பு நடவடிக்கைகள் உரிய வகையில் பின்பற்றப்படுகின்றனவா என்பதை முழுமையாகக் கண்காணித்து வருகின்றனர்.

இந்த நிலையில் சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு நாடிக்கு முகக்கவசம் அணிந்து வந்தவரை பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். (ஓ,9)



## சுதேச மருந்துகளை விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்துங்கள்

### பிரதமர் மஹிந்த வலியுறுத்து

*கொழும்பு, டிசெ.14*

கொரோனாத் தடுப்புக்காக தேசிய மட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சுதேச மருந்து மற்றும் சிகிச்சை முறைகளை விஞ்ஞான ரீதியில் உறுதிபடுத்தும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தேசிய ஆராய்ச்சி சபைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதன்படி, கொரோனாத் தடுப்புக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளூர் மருத்துவம், கலாநிதி ஹர்ஷ சுபசிங்க மற்றும் இந்திக ஜாகொட ஆகியோரால் தயாரிக்கப்பட்ட உள்ளூர் சிகிச்சை முறை மற்றும் கேகாலை தம்மிக பண்டார ஆயுர்வேத மருத்துவரின் ஔடத பாணி என்பவற்றை விஞ்ஞான முறையில் உறுதிப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் உலகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கொரோனாத் தடுப்பூசி வகைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பிரதமர் அறிவுறுத்தியிருந்தார். அது தொடர்பான சீ.டீ.ஏ. அறிக்கையை தேசிய ஆராய்ச்சி சபை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் கையளித்துள்ளது. (வ-இ)

## மாத்தளையில் முதல் நபரை காவு வாங்கியது கொரோனா

*மாத்தளை, டிசெ.14*

கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்த மூவரில், மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயதுடைய ஆண் ஒருவர் உள்ளடங்குகிறார். இவர் நிமோனியாவால் பீடிக்கப்பட்டிருந்தார் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதன்படி, மாத்தளை மாவட்டத்தில் முதலாவது கொரோனா உயிரிழப்பு பதிவாகியுள்ளது. இதேவேளை கொரோனாத் தொற்றினால் நேற்று உயிரிழந்த ஏனைய இருவரும், கொழும்பு 10 ஐச் சேர்ந்த 62 வயதுடைய பெண்ணும், வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய பெண்ணும் ஆவர். (வஇ)

# மணல் அகழ்வுக்கு எதிரான தீர்மானத்தை அமுல்படுத்துக!

## சுற்றாடல் அமைச்சர் ஆலோசனை

கொழும்பு, டிசெ.14

கள ஆய்வின்றி காணிகளில் மண் அகழ்வதற்கான அனுமதி வழங்குவதை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த அனுமதிப்பத்திரங்கள், தென்னந்தோட்டங்களில் மணல் அகழ்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன என்று சுற்றாடல் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வட மேல் மாகாணத்தில் தென்னந் தோட்டங்களில் மணல் அகழப்படும் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு புவிசரிதவியல் மற்றும் சுரங்கப்பணியகத்துக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியிருந்தார்.

தென்னந்தோட்டங்களில் தரிசு நிலங்கள் காணப்படினும், அங்கு மணல் மற்றும் மண் அகழ்வதற்கான அனுமதி கோரப்பட்டால், அந்தப் பகுதிகள் வேண்டுமென்றே தரிசாக விடப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிய நடவடிக்கை எடுக்குமாறும் சுற்றாடல் அமைச்சரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ற-இ)





# கிளி.சேவைச்சந்தையில் 45 பேருக்கு பி.சி.ஆர். !!

கிளிநொச்சி, டிசெ.14

கிளிநொச்சி சேவைச்சந்தைக்கு வருகை தந்த வெளிமாவட்ட சாரதிகள் மற்றும் சந்தை வியாபாரிகளிடமிருந்து பி.சி.ஆர் மாதிரிகள் இன்று பெறப்பட்டன.

இவ்வாறு 45 பேரிடமிருந்து மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தெரிவிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரால் இந்த மாதிரிகள் இன்று பெறப்பட்டது. கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டங்களும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ற-6,214)

# தொல்பொருள் தொகுதியை சேதப்படுத்திய 10 பேர் கைது!

கொழும்பு, டிசெ.14

விஜிதபுர கோட்டையை அண்மித்துள்ள தொல்பொருள் தொகுதியை சேதப்படுத்திய சந்தேகத்தில் அநுராதபுரம் - இபலோகம, அழகப்பெருமாகம பிரதேசத்தைச் சேர்ந்த 10 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் இந்த தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடம் இனந்தெரியாதோரால் சேதப்படுத்தப்பட்டிருந்தது.

அழகப்பெருமாகம பிரதேசத்தில் எல்லை மதிலொன்றை நிர்மாணிக்கும் போது இந்த தொல்பொருள் பிரதேசம் சேதப்படுத்தப்பட்டது. குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ற-இ)

# ஜனாஸாக்களை அடக்கம்செய்ய அனுமதி வழங்க வேண்டும்

## கல்முனையில் போராட்டம்

கொழும்பு, டிசெ.14

கொரோனாத் தொற்றால் இறந்தவர்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி கல்முனையில் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றுள்ளது.

தாருஸபா அமையம் மற்றும் அல் மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா அமைப்பினர் உட்பட கல்முனை பொது அமைப்புக்கள் பல இணைந்து கல்முனை முஹையத்தின் ஜும்மா பள்ளிவாசலுக்கு முன்னால் வெள்ளைத் துணிகளைக் கட்டி முஸ்லிம் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் எனும் கோரிக்கையுடன் "கவன் சீலை போராட்டம்" எனும் போராட்டத்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை முன்னெடுத்தனர். (ந-இ)

# ஐ.தே.க பொதுச் செயலாளராக பாலித ரங்கே பரிந்துரைப்பு

கொழும்பு, டிசெ.14

ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பதவிக்கு அக்கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து அண்மையில் விலகியிருந்தார். இதையடுத்து பதில் பொதுச்செயலாளராக சமல் செனரத் நியமிக்கப்பட்டார். இந்நிலையில் முன்னாள் எம்.பி ரங்கே பண்டாரவின் பெயரும் அப்பதவிக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ-இ)

# மிலேனியம் சவாலில் இலங்கை தொடரும்

## உறுதிப்படுத்தியது அமெரிக்கா

கொழும்பு, டிசெ.14

மிலேனியம் சவால் உடன்படிக்கையில் தொடர்ந்தும் உள்ளது என அமெரிக்க இலங்கை தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது. வொஷிங்டன் டி.சி.யில் நாளை எம்.சி.சி தொடர்பான கூட்டம் இடம்பெறவுள்ளது. இந்தத் திட்டத்தை வழங்கும் பட்டியலில் இலங்கை உள்ளது.

ஆயினும் கூட்டத்தில் எட்டப்படும் முடிவுகள் தொடர்பில் ஊகிக்க முடியாது என்று அமெரிக்க தூதரகத்தின் பேச்சாளர் நான்சி வென்ஹோர்ன் தெரிவித்துள்ளார். பொருளாதார வளர்ச்சியின் மூலம் வறுமையைக் குறைக்கும் நோக்கில் 480 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கும் இந்த ஒப்பந்தத்தை தற்போதைய அரசு 2019 டிசெம்பரில் நிறுத்தி, அதை மீளாய்வு செய்ய நான்கு பேர் கொண்ட குழுவை நியமித்தது. அதன் மீளாய்வு அறிக்கை கடந்த ஜூன் மாதம் பிரதமர் மற்றும் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையில் எம்.சி.சி. மானியப் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டது என தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், இலங்கை இந்தத் திட்டத்திலிருந்து நீக்கப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வஇ)

# 2,404 கிலோ மஞ்சளுடன் இந்தியர்கள் மூவர் கைது

புத்தளம், டிசெ.14

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட 2 ஆயிரத்து 404 கிலோ கிராம் மஞ்சள் புத்தளம் கல்லாறு கடற்படை முகாமுக்கு அருகிலுள்ள கடற்பரப்பில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டுள்ளது.

10 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த மஞ்சளைக் கடத்திவரப் பயன்படுத்தப்பட்ட 'டச்' படகுடன் இந்தியர்கள் மூவரும் இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கல்லாறு கடற்பரப்பிலிருந்து 27 கடல் மைல் தொலைவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, 64 உரப்பைகளில், பொதி செய்யப்பட்டிருந்த நிலையில் இம் மஞ்சள் கைப்பற்றப்பட்டது என கடற்படையினர் தெரிவித்தனர். (ந-இ)

SRI LANKA POST

# தபால் திணைக்களத்தால் வீடுகளுக்கு பொதிகள் சேவை

கொழும்பு, டிசெ.14

பொதிகளை வீடுகளுக்கே கொண்டு சென்று விநியோகிக்கும் சேவையை தபால் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தச் சேவையை தபால் திணைக்களம் நாளை முதல் அமுல்படுத்த தீர்மானித்துள்ளது என்று தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டத்தில் 50 ஆயிரம் ரூபா வரையான பெறுமதியுடைய பொருள்களை வீடுகளில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். எதிர்வரும் நாள்களில் 50 ஆயிரத்துக்கும் அதிக பெறுமதியுடைய பொருள்களையும் வீடுகளுக்கே கொண்டுசென்று விநியோகிக்கும் நடைமுறை பின்பற்றப்படவுள்ளது என்று தபால் மா அதிபர் மேலும் அறிவித்துள்ளார். (ற-இ)

# பி.சி.ஆர். அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.14

நாட்டில் நேற்றைய தினம் அதிகூடிய பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதால் இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதன்படி, 15 ஆயிரத்து 239 பேருக்கு நேற்றைய தினம், பி.சி. ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அந்நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. (வ-இ)

## விதிகளை மீறிய 41 பேர் கைது

கொழும்பு, டிசெ.14

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியை கடைப்பிடிக்காமை உள்ளிட்ட தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டுக்களில் 41 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 390 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## கண்டி நிலநடுக்கங்கள்; அறிக்கை மாத இறுதியில்

கொழும்பு, டிசெ.14

கண்டியின் திகன பகுதியில் பதிவான நிலநடுக்கங்கள் தொடர்பான அறிக்கை இந்த மாத இறுதியில் ஆய்வுக் குழுவால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறுகிய காலத்துக்குள் அந்த பகுதியில் மூன்று நில நடுக்கங்கள் பதிவாகியுள்ளன. அமைச்சர் மஹிந்த அமரவீரவால் புவி சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்துக்கு இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது. இதையடுத்து 5 பேர் அடங்கிய விசேட நிபுணர்கள் குழு திகன பகுதிக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டது. பூமியின் உட்புறத்தில் உள்ள சுண்ணாம்பு பாறைகளில் ஏற்பட்டுள்ள அழுத்தம் காரணமாக இந்த நடுக்கம் பதிவாகியுள்ளது என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## சிங்கப்பூருக்கான இலங்கையின் விமான சேவை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.14

இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கு இடையிலான விமான சேவை இந்த மாதம் 18ஆம் திகதியிலிருந்து அதிகரிக்கப்படவுள்ளது என ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, விமான சேவையை வாரத்துக்கு மூன்றாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மலேசியாவுக்கான விமான சேவையையும் வாரத்துக்கு ஒரு தடைவை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த விமான சேவைகள் தொடர்பான மேலதிக தகவல்களை ஸ்ரீ லங்கன் விமான சேவையின் கொழும்பு, காலி மற்றும் கண்டி ஆகிய இடங்களிலுள்ள விமான டிக்கெட் விற்பனை அலுவலகங்கள், சுற்றுலா பிரதிநிதிகள் அல்லது 0117771979 என்ற தொலைபேசி இலக்கம், என்ற இணையத்தின் மூலமும் அறிந்து கொள்ளலாம் என ஸ்ரீ லங்கன் விமான நிறுவனம் அறிவித்துள்ளது. (வ-இ)

## கொரோனா கட்டுப்படுத்தலில் தெளிவு வேண்டும்

*அரசை சாடுசிறார் ரணில்*



கொழும்பு, டிசெ.14

கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

பியகம பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், தொற்று அதிகரித்துவரும் நிலையில், அங்கீகரிக்கப்படாத மருந்துகளை அமைச்சர்கள் பெற்றுக்கொள்வது தவறானது என சுட்டிக்காட்டியுள்ள அவர், இது தொடர்பில் ஆராய்வதற்கு அனுபவமுள்ள நபர்கள் நாட்டிலேயே உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

## லொக்காவின் உதவியாளர் அதிரடிப்படையினரால் கைது

கொழும்பு, டிசெ.14

பாதாள உலகக்குழுத் தலைவர் அங்கொட லொக்காவின் உதவியாளர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவர் (வயது-38) பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்கொட பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ள இச் சந்தேகநபரிடமிருந்து, 2 துப்பாக்கிகள் மற்றும் ரி-56 ரக 18 ரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. கைதான நபருக்கு அங்கொட லொக்காவுடன் தொடர்பு உள்ளதா என்பது தொடர்பில் முல்லேரியா பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இரண்டு வாள்கள், துப்பாக்கி மற்றும் கைக்குண்டு ஆகியவற்றுடன் ஒருவர் அவிசாவளையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ந-இ)

## 7 ஆயிரத்து 211 பேர் தனிமை நிலையங்களில்

கொழும்பு, டிசெ.14

முப்படையினரால் நிர்வகிக்கப்படும் 76 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 7 ஆயிரத்து 211 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் உள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.இதேவேளை, தற்போது வரை 23 ஆயிரத்து 793 பேர் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணம டைந்து வீடு திரும்பியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## சம்பிக்கவுக்கு புதிய பதவி



கொழும்பு, டிசெ.14

நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதித் தலைவராக விரைவில் நியமிக்கப்படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது. ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து அவர் விலகியுள்ள நிலையில் இந்தப் பதவி வழங்கப்படவுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் விலகுகிறேன் என அறிக்கை வெளியிட்டுள்ள சம்பிக்க புதிய சமூக சக்தியொன்றை உருவாக்கும் நோக்கிலேயே, தான் கட்சியிலிருந்து விலகியுள்ளேன் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (வ-இ)

## யானை - மொட்டு மோதல்

**12 பேர் மருத்துவமனையில்**

கொழும்பு, டிசெ.14

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கும் இடையே மஹியங்கன பொலிஸ் நிலையத்துக்கு முன் நேற்று இடம்பெற்ற மோதலில் 12 பேர் காயமடைந்துள்ளனர். மொட்டுக்கட்சியின் வசமுள்ள மஹியங்கன பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் 2ஆவது முறையாக தோல்விகண்டது. இதனையடுத்து அங்கு இடம்பெற்ற மோதல் தொடர்பாக விசாரணை நடத்த சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த சந்தர்ப்பத்திலேயே இன்னுமொரு மோதல் இடம்பெற்றுள்ளதுடன் அதில் 12 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வஇ)

# பயங்கரவாதிகளின் தாக்குதலில் 300 மாணவர்களை காணவில்லை



அபுஜா, டிசெ. 14

நைஜீரியாவின் வடக்கு பகுதியில் உள்ள ஆண்கள் பாடசாலையில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலின் பின்னர் அங்கு 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் காணாமல் போயுள்ளனர்.

அந்தப் பாடசாலையில் 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தப் பாடசாலையில் வழக்கம்போல் வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதன்போது துப்பாக்கிகளுடன் மோட்டார் சைக்கிள்களில் வந்து இறங்கிய பயங்கரவாதிகள் பாடசாலையில் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அச்சமடைந்த மாணவர்கள் அங்கிருந்து சிதறி ஓடியுள்ளனர். பின் நேற்று காலை 400 மாணவர்கள் வரையில் வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். ஆனாலும் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் இன்னும் வீடுதிரும்பவில்லை.

அவர்களைப் பயங்கரவாதிகள் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றிருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. மாணவர்களை தேடும் பணியில் பொலிஸார், சிப்பாய்கள் ஈடுபட்டுள்ளனர். (ம-வஇ)

# எஸ்வடினி பிரதமர் கொரோனால் பலி

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான எஸ்வடினி பிரதமர் அம்ப்ரோஸ் டிலாமினி கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்ட நிலையில் தனது 52ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

நான்கு வாரங்களுக்கு முன்னர் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்ட அவர், உயர் சிகிச்சைக்காக தென் ஆபிரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு, நாளடைவில் அவரது உடல்நிலை மோசமான நிலையில், அம்ப்ரோஸ் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார் என அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. (ம-வஇ)



# ஜெர்மனில் மீண்டும் ஊரடங்கு



பெர்லின், டிசெ.3

ஜெர்மனியில் மீண்டும் நாடு தழுவிய முழு ஊரடங்கை நடைமுறைப்படுத்த அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. மேலும் ஊரடங்கை மிகவும் கடுமையாக நடைமுறைப்படுத்தவும் அரசு முடிவெடுத்துள்ளது.

நேற்றுவரை ஜேர்மனியில் 13 லட்சத்து 20 ஆயிரத்து 592 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 22 ஆயிரத்து 171 பேர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே வைரஸ் பரவலை கட்டுப்படுத்த கொரோனா கட்டுப்பாடுகளை தீவிரமாக்குவது குறித்து அரசு கடந்த சில வாரங்களாகவே தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வந்தது.

அதன்படி இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி வரை ஊரடங்கு அமுலில் இருக்கும் எனவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய கட்டுப்பாடுகளின்படி, சகல கல்வி நிறுவனங்கள், அத்தியாவசியமான கடைகளைத் தவிர ஏனையவற்றை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான மக்கள் வீடுகளில் இருந்தே வேலை பார்க்கும்படி அறிவுறுத்தப்படவுள்ளனர். (ம-வஇ)



# ஆபத்தானது ஆப்கான்

காபூல், டிசெ.14

பயங்கரவாத தாக்குதல்களால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக ஆப்கானிஸ்தான் உள்ளது என பொருளாதாரம் மற்றும் அமைதி அமைப்பு தனது வருடாந்த உலக பயங்கரவாத குறியீடு பற்றிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.


கடந்த 2019ஆம் ஆண்டில் உலகில் நடந்த 20 மோசமான பயங்கரவாத தாக்குதல்களில் 6 தாக்குதல்கள் அந்நாட்டில் இடம்பெற்றுள்ளன என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-வ,இ)

# ஆப்கான் தாக்குதலில் 18 தலிபான்கள் சாவு

காபூல், டிசெ. 14

ஆப்கானிஸ்தானின் கிழக்கு மாகாணமான கஸ்னியில் ஆப்கான் படையினர் நேற்று மேற்கொண்ட தாக்குதலில் தலிபான் குழுவின் 18 உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது, ஏராளமான ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் இராணுவ உபகரணங்கள் என்பனவும் அழிக்கப்பட்டன என்று ஆப்கானிய ஆயுதப் படைகள் மேலும் தெரிவித்தன. ஆப்கானிஸ்தான் அரசு மற்றும் தலிபன்களுக்கிடையே பல சுற்று சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இரு தரப்பினர்களுக்கிடையிலும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. (ம-வஇ)



# போகோஹராமால் 27 பேர் கொலை

நைஜர், டிசெ. 15

நைஜிரியாவின் தென் கிழக்கு பகுதியில் போகோஹராம் பயங்கரவாதிகளால் குறைந்தது 27 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளன. டிபா பிராந்தியத்தில் உள்ள டூமூர் கிராமத்தில் நேற்று அதிகாலை ஆயுதமேந்திய குழு இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. இந்த தாக்குதல்களின் விளைவாக சுமார் 800 வீடுகளும் பணியிடங்களும் அழிக்கப்பட்டுள்ளன. (ம-வஇ)




# முதல் படமே கடைசி படமான சோகம்

## மறைந்த நடிகை சித்ராவின் 'கால்ஸ்' பட பர்ஸ்ட் லுக் வெளியானது!

'பாண்டியன் ஸ்டோர்ஸ்' தொடர் மூலம் பிரபலமான சின்னத்திரை நடிகை சித்ரா அண்மையில் தனியார் ஹொட்டல் ஒன்றில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். இந்த சம்பவம் ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியது. அவரின் தற்கொலை குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் நடிகை சித்ராவின் நீண்ட நாள் ஆசை தற்போது நிறைவேறவுள்ளது.

சித்ரா கதாநாயகியாக நடித்த முதல் படத்தின் 'ஃபர்ஸ்ட் லுக்' வெளியாகியுள்ளது. 'கால்ஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த திரைப்படத்தை சபரீஸ் இயக்கியுள்ளார்.

இந்தப் படத்தில் நடிகை சித்ரா கதாநாயகியாகவும் டெல்லி கணேஷ், நிழல்கள் ரவி, ஆர்.சுந்தர்ராஜன், தேவதர்சினி, வினோதினி வைத்தியநாதன் ஆகிய உள்ளிட்டோர் முக்கிய வேடத்திலும் நடித்துள்ளனர்.

இந்த ஆண்டே வெளியிடவிருந்த இப்படம் கொரோனா காரணமாக தள்ளிப்போனது. எனவே 2021ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி படத்தின் ட்ரைலர் மற்றும் ஜனவரி இறுதியில் படமும் வெளியாகும் என படக்குழு தெரிவித்துள்ளது.,





## இன்ஸ்டாகிராமில் செல்வாக்கு மிகுந்தவர்களின் பட்டியலில் விராட் கோலி அனுஷ்கா சர்மா

மக்கள் அதிகம் பயன்படுத்தும் சமூக வலைத்தளங்களில் இன்ஸ்டாகிராமும் ஒன்று. அந்தவகையில் இன்ஸ்டாகிராமில் அதிக செல்வாக்கு மிகுந்த 1000 பேரின் பட்டியலை *Hype Auditor* தயாரித்து வெளியிட்டுள்ளது. அவர்கள் இடும் பதிவுகள் எந்த அளவுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பை பெறுகிறன உள்ளிட்டவற்றை அடிப்படையாக வைத்து இந்த பட்டியலைத் தயாரிக்கின்றனர்.


அதில் கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ முதலிடத்தை பிடித்துள்ளார். அவரது ஒவ்வொரு பதிவுக்கும் சுமார் 4.5 மில்லியன் ரசிகர்கள் இருக்கிறார்கள் எனதெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவை பொறுத்தவரை கிரிக்கெட் வீரர் விராட் கோலி முன்னிலையில் இருக்கிறார். அவர் இந்த பட்டியலில் 12வது இடத்தை பிடித்துள்ளார். பிரதமர் மோடி 19வது இடத்தையும், நடிகை அனுஷ்கா சர்மா 25வது இடத்தையும், கத்ரினா கைஃப் 45வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

## 'தளபதி' ரஜினியாக மாறிய ஹரிஷ் கல்யாண்

'பியார் பிரேமா காதல்' படத்தின் கூட்டணியில் உருவாக இருக்கும் அடுத்த படத்தின் 'பர்ஸ்ட் லுக்' போஸ்டர் வெளியாகி உள்ளது.

இயக்குநர் இளன் இயக்கத்தில் ஹரிஷ் கல்யாண் - ரைசா நடிப்பில் வெளியான 'பியார் பிரேமா காதல்' திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வர வேற்பை பெற்றது. இந்த கூட்டணி மீண்டும் இணைந்துள்ளது.

'ஸ்டார்' என பெயரிடப்பட்டுள்ள அந்த படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி உள்ளது. ரஜினியின் 'தளபதி' படத்தின் கதாபாத்திரம் போல 'பர்ஸ்ட் லுக்கில்' காட்சியளிக்கிறார் நடிகர் ஹரிஷ் கல்யாண். ரஜினிகாந்தின் பிறந்தநாளையொட்டி இந்தக் போஸ்டர் வெளியிடப்பட்டுள்ளது.







## விஜய்க்கு ஜோடியாக ரஷ்மிகா மந்தனா?

விஜய்யின் 65 ஆவது படத்தில் விஜய்க்கு ஜோடியாக ரஷ்மிகா மந்தானா நடிக்கவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. விஜய்யின் 64ஆவது படமான 'மாஸ்டர்' பொங்கலுக்கு திரைக்கு வர உள்ளது. அடுத்ததாக அவரின் 65ஆவது படத்தை இயக்குவது யார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் இருந்து வந்தது.

இந்நிலையில் விஜய் 65 திரைப்படத்தை சன்பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்க இயக்குநர் நெல்சன் திலீப் குமார் இயக்கவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திரைப்படத்துக்கு அனிருத் இசையமைக்கவுள்ளார்.

இந்த நிலையில் விஜய்க்கு ஜோடியாக ரஷ்மிகா மந்தனா நடிக்கவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்த வகையில் தளபதி65 படத்தில் விஜய்க்கு ஜோடியாக ரஷ்மிகா மந்தனாவை நடிக்க வைக்க படக்குழுவினர் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றன என தக வல்கள் வெளியாகியுள்ளன .அவர் ஒப்பு கொண்டால் தளபதி விஜய்யுடன் ரஷ்மிகா நடிக்கும் முதல் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



ஐ.எஸ்.எல். கால்பந்து :

# சென்னை-கவுகாத்தி ஆட்டம் சமநிலையில்

புதுடில்லி, டிசெ.14

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியின் 26 ஆவது லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன் சென்னையின் எப்.சி. நோர்த் ஈஸ்ட் யுனைடெட்டை(கவுகாத்தி) எதிர் கொண்டது. ஆட்டம் முடிவில் கோல் எதுவும் இன்றி இந்தப் போட்டி சமநிலையில் முடிந்தது.

இந்தத் தொடரில் சமநிலையான 11 ஆவது ஆட்டம் இதுவாகும்.

11 அணிகள் பங்கேற்றுள்ள 7 ஆவது இந்தியன் சூப்பர் லீக் கால்பந்துப் போட்டி கோவாவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று மாலை நடைபெற்ற 26 ஆவது லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன் சென்னையின் எப்.சி., நோர்த் ஈஸ்ட் யுனைடெட் அணிகள் மோதின. இரு அணிகளும் இறுதிவரை கோல் எதுவும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

சென்னை அணி இதுவரை 5 ஆட்டங்களில் விளையாடி ஒரு வெற்றி, 2 சமநிலை, 2 தோல்வி என்று 5 புள்ளிகளுடன் 8 ஆவது இடம் வகிக்கிறது. 6 ஆவது ஆட்டத்தில் ஆடிய கவுகாத்தி அணிக்கு இது 4 ஆவது சமநிலையாகும்.

இன்று இரவு 7.30 மணிக்கு நடக்கும் லீக் ஆட்டத்தில் மும்பை சிட்டிஜாம்ஷெட்பூர் எப்.சி. அணிகள் மோதுகின்றன. (ற-இ)

பிக் பாஷ் லீக் தொடர்:

## 45 ஓட்டங்களால் சிட்னி சிக்சர்ஸ் அபார வெற்றி!!

கான்பேரா, டிசெ.14

பிக் பாஷ் லீக் ரி20 தொடரில் சிட்னி சிக்சர்ஸ் அணி 145 ஓட்டங்கள் வித்தியசத்தில் அபார வெற்றி பெற்றது.

பிக் பாஷ் லீக் ரி20 கிரிக்கெட்டில் நேற்று நடந்த ஆட்டத்தில் சிட்னி சிக்சர்ஸ் மெல்போர்ன் ரெனேகட்ஸ் ஆகிய அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிட்னி சிக்சர்ஸ் அணி ஜோஷ் பிலிப், ஜோர்டான் சில்க் ஆகிய வீரர்களின் அதிரடி ஆட்டத்தால் 4 இலக்குகள் இழப்புக்கு 205 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 206 ஓட்டங்கள் கடின இலக்குடன் மெல்போர்ன் ரெனேகட்ஸ் களம் இறங்கியது. அந்த அணி 10.4 பந்துப் பரிமாற்றங்கள் மட்டுமே தாக்குப்பிடித்து 60 ஓட்டங்களில் சுருண்டது.

இதனால் சிட்னி சிக்சர்ஸ் 145 ஓட்டங்கள் வித்தியசத்தில் அபார வெற்றி பெற்றது. பிக் பாஷ் ரி20 லீக்கில் மிகவும் அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஒரு அணி தோல்வி அடைந்தது இதுவே முதல்முறை யாகும். (ற-இ)

## ஆஸி அணியில் மீண்டும் ஸ்டார்க்

கான்பரா, டிசெ.14

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் இடது கை வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் ஆஸ்திரேலிய அணியுடன் மீண்டும் இணைகிறார். இவர் தனது குடும்ப உறுப்பினருக்கு ஏற்பட்ட உடல் நலக்குறைவு காரணமாக இந்தியாவுக்கு எதிரான முதலாவது ரி20 போட்டியுடன் அணியிலிருந்து விலகினார். தற்போது நிலைமை சரியாகி விட்டதால் அவர் இன்று ஆஸ்திரேலிய அணியுடன் மீண்டும் இணைகிறார் என்று சக வேகப்பந்து வீச்சாளர் ஹேசில்வுட் தெரிவித்துள்ளார்.(ற-இ)

# எதிர்ப்பு அரசியலால்....

தொடர்பில் விடுத்துள்ள கேள்வி பதில் ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது, வட கிழக்கு தமிழ் மக்களின் அரசியலானது எதிர்ப்பு அரசியல், இணக்க அரசியல் என்று இதுகாறும் இருந்துவந்துள்ளது. அல்லது எதிர்ப்புக்காக நடுநிலைமையும் அல்லது இணக்கத்துக்காக நடுநிலைமை என்றும் இடம்பெற்றுள்ளன. பொதுவாக போரை ஆதரித்தவர்கள் எதிர்ப்பு அரசியலையும் பொருளாதார மேம்பாட்டையும் தமது சொந்த நன்மைகளை எதிர்பார்த்தவர்கள் இணக்க அரசியலையும் ஆதரித்து வந்துள்ளார்கள்.

**பேச்சு மாற்றம்**

சுமந்திரன் இணக்க அரசியலுக்காக போர்க் குற்ற விசாரணை முடிவடைந்துவிட்டது என்று கூடக் கூறியிருந்தார். ஒற்றையாட்சிக்குள் பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரப் பரவலை சமஷ்டி என்று அடையாளம் காட்டினார். 'எக்சத்' 'ஏகிய' பற்றி நிறையப் பேசினார். தற்போது அவரின் பேச்சுக்கள் மாறிவருவதை எல்லோரும் அவதானிக்கலாம். விசாரணை முடிந்தது என்று முன்னர் கூறியவர் விசாரணை வேண்டும் என்று இன்று கூறுகின்றார். மேலும் சமஷ;டி வேண்டும் என்கின்றார். என்ன நடந்தது? தமது இணக்க அரசியலை மக்கள் விரும்பவில்லை என்பதை அவர் உணர்ந்து கொண்டதே காரணம். என்றாலும் எதிர்ப்பு அரசிலுக்குள் மீண்டும் போவதையும் அவர் விரும்பவில்லை போலத் தெரிகின்றது. ஆகவே இம்முறை இரண்டும் இல்லாமல் நடுநிலைமை வகிக்க கூட்டமைப்பு முன்வந்துள்ளது. அவர்கள் வாக்களிக்கும் தினத்தில் காலை 11 மணிக்குக் கூடியே தமது முடிவுக்கு வந்துள்ளனர்.

**உண்மை உரைப்பேன்**

அரசை நான் காரசாரமாக சாடியாகிவிட்டது. உண்மைகளை எடுத்துரைப்பேன். எதிர்க்கட்சிகளின் கடமை அரசை எந்நேரமும் எதிர்ப்பதே என்ற கருத்தை நான் ஏற்கமாட்டேன். எதிர்க்கட்சிகள் அரசை சரியான திசையில் பயணிக்க வழி நடத்த வேண்டும் என்பதே எனது கருத்து. அரசு பெரும்பான்மை நிலையைப் பெற்ற ஒன்று. எமது வாக்குகள் அவர்களுக்குத் தேவையற்றது. நாங்கள் அவர்களுக்கு எதிராக வாக்களித்தாலும் ஒன்று தான். நடுநிலைமை வகித்தாலும் ஒன்று தான். ஆனால் மாற்றத்தை ஏற்படுத்தாத எந்தச் செயலோ பேச்சோ அர்த்தமற்றது. பத்திரிகையில் போடுவதற்காக எதிர்ப்பது குழந்தைப் பிள்ளைத்தனம்.

**அரசுடன் பேச்சு**

ஆகவே நான் வாக்களிக்காமல் இருப்பதே மேல் என்று எண்ணினேன். காரணம் தொடக்கத்தில் இருந்தே எதிர்ப்பு அரசியலைக் காட்டி வந்த முன்னைய அரசியல்வாதிகள் தொடர்ந்து எதிர்ப்பு அரசியலையே வெளிப்படுத்தி வந்திருந்தார்கள். அவர்களை எதிரிகளாகவே அப்போதைய அரசினர் பார்த்தார்கள். அதனால் அவர்களுடன் அரசுகளும் பேசவில்லை. இவர்களாலும் அவர்களுடன் பேசமுடியவில்லை. நான் அவ்வாறு எனது காலத்தைத் தொடங்க விரும்பவில்லை. ஏற்கனவே 2ஆம் வாசிப்பில் நான் வாக்களிக்காது இருந்திருந்தேன். அதே போல்த் தொடர்ந்தால் என்ன என்று எண்ணினேன். காரணம் எமது அரசியல் கைதிகள் பற்றி அரசுடன் பேச வேண்டி இருக்கின்றது. மற்றும் ஒரு புதிய அரசமைப்பு நிர்மாணத்தை நாம் எதிர் கொண்டுள்ளோம். முன்னைய அரசு காலத்தில் எமது வாக்குகளுக்குப் பலம் இருந்தது. அப்போது 'எமது சிறைக் கைதிகளை வெளிவிடுங்கள். நாங்கள் உங்களுக்கு வாக்களிக்கின்றோம்' என்று கூறியிருக்கலாம். எமது பிரதிநிதிகள் அவ்வாறு கூறவில்லை. தமது வாக்கை மக்கள் நலன் கருதிப் பாவிக்கவில்லை. இப்பொழுது அவ்வாறான ஒரு நிலை இல்லை; பேசித் தீர்க்க வேண்டியுள்ளது. அரசாங்கம் மற்றும் முக்கிய எதிர்க்கட்சி ஆகியோருடன் பேசுவதென்றால் பக்கச் சார்பில்லாமல் இருப்பதே உசிதம் என்று நான் கண்டு கொண்டேன். ஒன்றை எதிர்ப்பது வெற்றியல்ல. ஒன்றுடன் இணைவதும் வெற்றியல்ல. வருவதற்கு முகம் கொடுக்கக் கூடியதாக இருப்பதே வெற்றி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதற்காக நடுநிலை வகித்தார்கள் என்பதை அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். ஒரு மின் காற்றுவீசி ஓடாமல் இருப்பது போல்த்தான் விசையாக ஓடும் போதும் காட்சி அளிக்கும். அதற்காக இரண்டு நிலைகளையும் ஒரே நிலையென்று கூறலாமா?, என்றுள்ளது. (ஒ,இ)



## ஆஸி. இந்திய அணிகளின் பயிற்சி ஆட்டம் சமநிலையில்

புதுடில்லி, டிசெ.14

ஆஸ்திரேலியா 'ஏ' இந்தியா அணிகளுக்கிடையில் சிட்னியில் நடைபெற்ற மூன்று நாள்கள் கொண்ட பயிற்சி ஆட்டம் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிந்தது. இந்த அணிகளுக்கிடையிலான 2 ஆவது பயிற்சி ஆட்டம் சிட்னியில் நடைபெற்றது. பகல் இரவு போட்டியான இதில் இந்தியா நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்தது. துடுப்பெடுத்தாடிய இந்தியா 194 ஓட்டங்களில் சுருண்டது.

பின்னர் முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலியா 'ஏ' இந்தியாவின் பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் 108 ஓட்டங்களில் சுருண்டது.

86 ஓட்டங்கள் முன்னிலையுடன் இந்தியா 2 ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது. ஹனுமா விஹாரி (104), ரிஷப் பண்ட் (103) ஆகியோர் சிறப்பாக விளையாடி சதம் அடிக்க இந்தியா நேற்றுமுன்தினம் நடந்த 2 ஆவது நாள் ஆட்ட முடிவில் 4 இலக்குகள் இழப்புக்கு 386 ஓட்டங்கள் குவித்தது.

நேற்றைய 3 ஆவது நாள் ஆட்டத்தில் 473 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலியா 'ஏ' களம் இறங்கியது.

தொடக்க வீரர்கள் ஹாரிஸ் (5), ஜோ பேர்ன்ஸ் (1), நிக் மேடின்சன் (14) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும், பென் மெக்டெர்போட் (107), ஜேக் வைல்டர்முத் (111) சதம் அடிக்க ஆஸ்திரேலியா ஏ அணி 4 இலக்குகள் இழப்புக்கு 307 ஓட்டங்கள் எடுத்தது.

அப்போது இரு அணித் தலைவர்களும் போட்டியை முடித்துக் கொள்ளச் சம்மதம் தெரிவித்தனர். இதனால் போட்டி சமநிலையில் முடிந்தது.(றஇ)